ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/70 - 2022 මාර්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.03.31

2273/70 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: KDS/KGK/4/2/2016/02/02.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2016/WS/551.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவில், அம்பிடிய உடகம வடக்கு (269) கிராம அலுவலர் பிரிவில், மீகனுவ கிராமத்திலமைந்த, நில அளவை மாஅதிபர் சார்பாக கண்டி பிராந்திய சிரேஷ்ட நில அளவை அதிகாரி அவர்களால் 2022.02.24 ஆந் திகதியிடப்பட்டு அளந்து தயாரிக்கப்பட்ட C.M 320390 இல் 01 ஆம் வலய இலக்கத்தின் 7 ஆம் படிவத்தில் காணித்துண்டு இல. 248 கொண்ட 0.0885 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க்காணும் காணித்துண்டின் விபரங்கள்:

**01. துண்டு இல. 248**

காணியின் பெயர்: தென்னேகும்புர வத்த; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எம். பி. டபிள்யூ. என். கே. ஜி. பீரிஸ், இல. 194, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி; விஸ்தீரணம்: 0.0885 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.04.26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.04.19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்டகோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை,
2022, மாச்சு 26.

EOG 03 - 1087

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: KDS/KGK/4/2(4)/2019/02/02.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2019/WS/588.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவின், வெவதென்ன (274) கிராம அலுவலர் பிரிவில், அழுபதகட கிராமத்திலமைந்த, நில அளவை நாயகம் சார்பாக கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் அளந்து 2022.01.20 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட C.M 320385 வரைபடத்தின் வலய இல. 06 இல் 25 ஆம் படிவத்தில் காணித்துண்டு இல. 436 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியில், 0.0340 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் காணித்துண்டின் விபரங்கள்:

**01. துண்டு இல. 436**

காணியின் பெயர்: அழுபதகடஹேன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: கல்யான பிரபோத திசாநாயக, இல. 305, அழுபதகட, பல்லேகம; விஸ்தீரணம்: 0.0340 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.04.27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.04.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்
கங்கவட்டகோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை,
2022, மாச்சு 26.

EOG 03 - 1088

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.